Registered as a NewsPaper in Ceylon விலை சதம் 15 ★★

19 NOV 1971
UNIVERSITY LIBRARY

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன் 389
தேசியத்தினசரி
மலர் 13
இதழ் 279

சாதாரண கார்த்திகை 3 றமழான் 30 வெள்ளிக்கிழமை (19-11-71)

அல்கத்தீன் பைப்புகள்
S-LON P.V.C.
பைப்புகள்
கல்வனைஸ்ட் பைப்புகள்
மலிவான விலையில் கிடைக்குமிடம்:-
கதிர் ஹாட்வெயர்ஸ்
ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7130 தந்தி: KATHIR

# 'ரேகன் அமெரிக்க உளவாளி' என தர்மசேகரா வர்ணனை

## ஆட்சிமன்றத்தில் இலங்கரத்தின தகவல்

கொழும்பு, வியாழன்

பயங்கரவாத தலைவர்களிடத்தில் கருத்துவேறுபாடு இருந்ததாகவும், ரோகண விஜயவீராவை தர்மசேகரா என்ற மற்றோர் தலைவர் அமெரிக்க உளவாளி என வர்ணித்திருந்தார் என்றும் வர்த்தக அமைச்சர் இலங்கரத்தின ஆட்சிமன்றத்தில் தெரிவித்தார்.

உத்தரவுபெற்றவியாபாரிகளிடமிருந்து பெறப்படும் கூப்பன்களை சங்கங்களுக்குமாற்ற அரசு முடிவு செய்துள்ளது. இவ்விஷயமாக சம்பந்தப்பட்டவர்களுடனும், ஆட்சிமன்றப்பிரதிநிதிகளுடனும் கலந்துபேசிய பின் தீர்க்கமான முடிவு எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

திரு. இலங்கரத்தின தொடர்ந்து பேசுகையில், பயங்கரவாதிகள் நடவடிக்கையில் திரு. டட்லிக்கும் தொடர்பு இருந்ததாகப் பேசிக் கொள்ளப்பட்டது. அவருக்குள்ளஎனக்குமிடையே அரசியல் கருத்துவேறுபாடு இருந்தபோதிலும் அவருக்கு இதில் தொடர்பு இருக்கும் என நான் நம்பவில்லை.

பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபட்டதாக கைது செய்யப்பட்டுகாவலில்வைக்கப்பட்டிருக்கும் நபர்கள் மீது வழக்குத்தொடர நீதி சபை முடிவுசெய்துள்ளது. குற்றமற்றவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள்.

### இருதலைவர்கள்

பயங்கரவாதிகளுக்கு ரோகன் விஜயவீராவும் தர்மசேகராவும் என இரு தலைவர்கள் இருந்திருக்கிறார்கள் இவ்விருவரிடையேயும் கருத்து வேறுபாடு இருந்திருக்கிறது. இதை அவர்கள் 1970-ம் ஆண்டு பேசிய பேச்சிலிருந்தும், அவர்கள் வெளியிட்ட 70 பக்க நூலிலிருந்தும் அறியமுடிகிறது. ரோகன் விஜயவீரா ஒரே இரவில் புரட்சிசெய்யவேண்டுமென்றும்: தர்மசேகரா, அரசியல் ஊடுருவல்செய்து படிப்படியாக நஞ்சூட்டி காரியத்தைச் சாதிக்க வேண்டுமென்றும் கருத்துடையவர்களாய் இருந்திருப்பதோடு, தர்மசேகரா ரோகன் விஜயவீராவை ஓர் அமெரிக்க உளவாளி என்றும் வர்ணித்திருக்கிறார் இத்தப்பயங்கரவாத இயக்கத்தில்படித்த வேலையற்ற பட்டதாரிகள் மட்டுமல்ல, வேலையிலிருக்கும் பட்டதாரிகள்,

(5-ம் பக்கம் பார்க்க)

## பழைய நகைகளை ஏழு நாட்களுக்குள் உருக்கக்கூடாது பொலிசார் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், வெள்ளி

பழைய நகைகளை வாங்கும்போது, அதனை 7 நாட்களுக்கு உருக்காமல் வைத்திருக்கவேண்டுமென்றும், உடனடியாக பழைய நகைகளை உருக்கினால், அந்தநகை சம்பந்தப்பட்ட பிரச்னைக்கு உருக்கிய நகைக்கடை உரிமையாளரே முழுப்பொறுப்பாளியாகவேண்டிவரும் எனவும்பொலிஸார் எச்சரிக்கைசெய்துள்ளனர்.

பழைய நகைகளை வாங்கும்போது, நகைகளை விற்பவர் பற்றிய முழு விபரங்களையும் கொண்ட ஒரு பதிவுப் புத்தகம் வைத்திருக்க வேண்டுமென்றும், பொலிசாருக்குத் தேவையானபோது அப்புத்தகத்தைக் காட்டவேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருட்டு நகைகள் இங்கு விற்கப்படுவதாகவும், நகைக்கடை உரிமையாளர்கள் அவற்றை உடனடியாகஉருக்கிவிடுவதால் திருடர்களைக் கண்டுபிடிப்பதில் கஷ்டம் ஏற்படுவதாகவும், பொலிசார் தெரிவித்தனர்.

பழைய நகைகளை உருக்கியதற்காக நகைக்கடை உரிமையாளர் ஒருவர் நீதிமன்றில் வைக்கப்பட்டிருந்தார் என்பதையும்பொலிசார் சுட்டிக்காட்டினர்.

1000 சுருட்டுக்கு வேதனம் 20 ரூபா

## வடக்கில் சில முதலாளிமார் சம்மதம் தெரிவித்துள்ளனர்

யாழ்ப்பாணம், வெள்ளி

இலங்கை சுருட்டுத்தொழிலாளர் சங்கத்தின் கோரிக்கையை ஏற்று 1000 சுருட்டுக்கு 20ரூபா வேதனம் கொடுக்க வடபகுதியில் சில முதலாளிமார் சம்மதம் தெரிவித்து துண்டுப்பிரசுரம் வெளியிட்டுள்ளனர்கள்.

சுருட்டுத் தொழிலாளர்களின் கூலியை 1000 சுருட்டுக்கு20 ரூபாவாக உயர்த்துமாறு நாவடி காரியாலயத்தில் இம்மாதம் 13ந் திகதி நடந்த இலங்கை சுருட்டுத் தொழிலாளர் சங்க பொதுக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

இம்மாதம் 16ந்திகதிமுதல் கூலிஉயர்வு கொடுக்காதமுதலாளிமார்களிடம் வேலைக்கு அமரவேண்டாமென்று இச்சங்கக் காரியதரிசி திரு. சி. முதலியார் கோரியிருந்ததைத்தொடர்ந்து வடபகுதியிலுள்ள சுமார் 350 சுருட்டுத் தொழிற்சாலைகளில் தொழிலாளர்கள் கூலி உயர்வு கோரி, வேலைக்குச் செல்லாதிருந்தனர். கொழும்பு, திஸமறகம ஆகிய இடங்களிலும் உள்ள இலங்கை சுருட்டுத்தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த சுமார் 2000 உறுப்பினர்கள் கூலிஉயர்வு கோரி வேலைக்குச்செல்லாமலிருந்தனர் என்று சங்கச் செயலாளர் கூறினார்.

(5ம் பக்கம் பார்க்க)

## வேதனஉயர்வு:இன்று நல்லூரில் மாநாடு

யாழ்ப்பாணம்,வெள்ளி

சுருட்டுத் தொழிலாளர்களின் வேதனத்தை அதிகரிப்பது பற்றி நல்லூரில் இன்று நடைபெறும் மகாநாட்டில் தீர்மானிப்பதென ஐக்கிய இலங்கை சுருட்டுத் தொழிலாளர் சங்கக் கமிட்டி கூட்டத்தில் நேற்று முடிவு செய்யப்பட்டது.

சங்கத்தலைவர் திரு ஆ. துரைராஜசிங்கம் தலைமையில் சங்க காரியாலயத்தில் நடந்த கமிட்டிக் கூட்டத்தில் நடவடிக்கை குழு ஒன்றும் வேலைநிறுத்தக் குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

இன்று நடைபெறும்சுருட்டுத் தொழிலாளர் மகாநாட்டிற்கு சுருட்டுத் தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளை திடீர் அறிவித்தல்மூலம் அழைப்பதென்றும் முடிவுசெய்யப்பட்டது.

1000 சுருட்டுகளுக்கு தற்போது 15 ரூபா வேதனம் வழங்கப்பட்டு வருவதாகவும் வேதனத்தை கூட்டும்படி தொழிலாளர் வற்புறுத்தி வருவதால் இன்று நடைபெறும் மகாநாட்டில் வேதனத்தைக் கூட்டுவது பற்றியும் எவ்வளவு அளவு தொகை கூட்டுவதென்றும் முடிவு செய்யப்படுமென சங்கத் தலைவர் தெரிவித்தார்.

## தேசிய சுவீப் முடிவுகள்

கொழும்பு, வியா

கொள்ளுப்பிட்டியிலுள்ள தேசியசுவீப் அலுவலகத்தில் இன்று இழுக்கப்பட்ட 371-வது தேசியசுவீப் முடிவுகள் வருமாறு:

முதலாவது பரிசு
18 A 0072 ரூ. 81, 800

இரண்டாவது பரிசு
18 U 0582 ரூ. 32. 720

மூன்றாவது பரிசு
28 H 0459 ரூ. 8,180

(5-ம் பக்கம் பார்க்க)

கலைக்கப்பட்ட விவசாயப்படையினரின்

## '1,000 கூப்பன் புத்தகங்கள் தேங்கிக்கிடக்கின்றன'

"தற்போது கலைக்கப்பட்டிருக்கும் விவசாயப்படையில் அங்கு சேவைபுரிந்து வந்த பத்தாயிரம் பேரில் ஒன்பதாயிரம் பேர் தங்களுடைய அரிசிக்கூப்பன் புத்தகங்களை திரும்பப்பெற்றுக் கொண்டிருப்பதாகவும் மிகுதி ஆயிரம் புத்தகங்கள் விவசாயப் படையின் கமிஷனரிடம் அப்படியே தேங்கிக் கிடக்கின்றன வென்றும் காலி எம். பி. டாக்டர் தஹநாயக்கா சார்பில் எதிர்க்கட்சி தலைவர் கேட்ட கேள்விக்கு பதிலளித்த ஆட்சிமன்ற விவகாரமந்திரி திரு. கே. பி. இரத்நாயக்கா தெரிவித்தார்.

டாக்டர் தஹநாயக்கா சார்பில் திரு ஜெ ஆர் கேட்ட மற்றொரு கேள்விக்கு நிதி அமைச்சர் டாக்டர் என். எம் பெரேரா பதிலளிக்கையில் பின்வருமாறு தெரிவித்தார்! 'சுவீப் பரிசு வழங்குவதற்காக தேசிய லொத்தர் சபை இறக்குமதி செய்த கார்களை சுவீப் அதிர்ஷ்டசாலிகள் ஏற்கமறுத்ததால் லொத்தர் சபையிடம்தேங்கிக் கிடக்கும் கார்களை

(5ம் பக்கம் பார்க்க)

யாழ் ஆஸ்பத்திரியில்

## 25 சத முத்திரை

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் நேற்றுத் தொடக்கம் 25 சத முத்திரை விற்பனைசெய்யப்படுகிறது. இந்த விற்பனை காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை நடைபெறும். யாழ் ஆஸ்பத்திரிக் கமிட்டியின் வேண்டுகோளுக்கமைய வடபகுதி தபாற்தந்தி அத்தியட்சகர் திரு. எம். நடராசா இந்த ஏற்பாட்டைச் செய்துள்ளார். (குரு. நி)

## வரி விளம்பரம்

மோட்டார் வாகனங்கள் மற்றும் சகலவிதமான யந்திரங்களுக்கும் உதிரிப்பாகங்கள் ஜேர்மனியில் தயாரிக்கப்பட்ட பொறியியலாளர்களின் மேற்பார்வையில் செய்து கொடுக்கப்படும். ராதா மெஷின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3709

சலவித நவதானியங்களும், கோழித்தீனி வகைகளும் கடுந்துச்சரக்குவகைகளும், வெவ்வேறு யந்திரங்கள் மூலம் அரைத்தும் கொடுக்கப்படும். விபரங்களுக்கு:- V. சிவானந்தன் மனோன்மணி மில்ஸ், 46/1 பிரவுண் ரோட், யாழ்ப்பாணம். 3694

(M G. M) குரக்கன்மா, கடலைமா, ஆட்டாமா, உழுந்துமா, கோப்பித்தூள், மஞ்சள் தூள் ஆகியவை எம்மிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். குறிப்பு: வியாபாரிகளுக்கு விசேஷ சலுகை உண்டு. முகமதி இரைண்டிங் மில்ஸ், 445, கே. கே. எஸ், வீதி. யாழ்ப்பாணம். 3675

### விற்பனைக்கு

ராதா செவ்விளநீர் எண்ணெய் தினமும் தலையில் தேய்த்து வருவதனால் கூந்தல் நீளமாக வளரும். மனோரம்மியமான வாசனை கொண்டது. எஸ். சுப்பிரமணியம் கொம்பனி, ...... சேன்துறை வீதி, யாழ்ப்பாணம் செட்டியார் தெரு, கொழும்பு. 3708

### விற்பனைக்கு

மணி மார்க் சுத்தமான வரகு அரிசி நீரிழிவு நிவாரணத்திற்கு டாக்டர்களினால் சிபார்சு செய்யப்பட்டு எமது சொந்த மேற்பார்வையில் தயாரிக்கப்பெற்றது. P. முத்தையா சந்தர் இன்டஸ்றீஸ், நாவலடி லேன், வண். மேற்கு, யாழ்ப்பாணம். 3706

### வைத்தியம்

வாதம், இரத்தி, தொய்வு ஆகிய வியாதிகளை முற்றாகக் குணப்படுத்துவதில் திறமை பெற்ற டாக்டர் எஸ். வல்லிபுரம் (D. A. M.) தங்க பாஸ்கரன் வைத்தியசாலை, இராசாவீதி, நல்லூர் மார்க்கெட், யாழ்ப்பாணம். 3748

### நன்றி நவிலல்

யாழ்ப்பாணம் கட்டப்பிராயைச் சேர்ந்தவரும், கொழும்பு மத்திய தந்திக் கந்தோரில் தபால் அதிபராகக் கடமையாற்றியவருமாகிய ஆ. க. அம்பிகைபாகர் 12-11-71 அகால மரணமானார். அன்னாரின் 15-11-71ல் நடைபெற்ற ஈமை சடங்கில் பங்குபற்றியவர்களுக்கும் அனுதாபச் செய்தி அனுப்பியவர்கட்கும் மலர்வளையங்கள் அனுப்பியவர்களுக்கும் அன்னாரின் குடும்பத்தினர் தமது நன்றியைச் செலுத்துகின்றனர். திருமதி மாக்கியம் அம்பிகைபாகரும், பிள்ளைகளும், கட்டப்பிராய், யாழ்ப்பாணம். 3751

## வேலணை கிராமசபை கேள்வி அறிவித்தல்

வேலை விபரம்:

நாச்சிமார் கோவில் றோட் வேலை 3-ம் பங்காரம்

வேலணை கிராமசபைத் தலைவரால் மேற்குறிப்பிட்ட வேலை செய்வதற்கு சீல் வைத்த கேள்விப்பத்திரங்கள் 1971 ம் ஆண்டு கார்த்திகைமாதம் 29-ம் திகதி திங்கட்கிழமை காலை 10-30 மணிவரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் பத்திரங்கள் 26-11-71-ம் திகதி பி. ப. 3-30 மணிவரையும் கேள்விப்பணம் ரூபா 50/- ம் பத்திரப்பணம் ரூபா 5/-ம் கட்டியதன் பேரில் உத்தியோக பூர்வமான பத்திரங்கள் பதிவுசெய்யப்பட்ட கொந்தராத்துக்காரருக்கு வழங்கப்படும்.

ஏனைய விபரங்கள் கிராமசபைக் காரியாலயத்திலும் தீவுப்பகுதி கிராமக வேலைப் பகுதிகாரியாலயம் வேலையிலும் அறிந்துகொள்ளலாம்.

இப்படிக்கு
நன்றியுள்ள
க. சதாசிவம்
தலைவர்

கிராமசபை
வேலணை 16-11-71.
3153

## விசர்நாய் கடித்து 274 பேர் பலி

கோலாலம்பூர் நாட்டின் எல்லாப் பகுதிகளிலுமிருந்து இந்த ஆண்டில் இதுவரை 274 பேர் விசர்நாய்க்கடிக்குள்ளாகி மரணமடைந்துள்ளனர். நாடுபூராவும் விசர்நாய்கள் தொல்லை அதிகரித்து வருவதாகவும் இதனைக் கட்டுப்படுத்தச் சுகாதாரப் பகுதியினர் தீவிர நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகவும் சுகாதாரப்பகுதி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## திருமண அழைப்பு

பொன்னுத்துரை — கனகாம்பிகை

மணமகன்: செல்வன் க. பொன்னுத்துரை
[அரசாங்க பொறியியற் கூட்டுத்தாபனம்]

மணமகள்: செல்வி கனகாம்பிகை
[சென்னை கர்நாடக இசை மத்தியகல்லூரி]

இடம்: நல்லூர்க் கந்தசுவாமிகோவில்:

காலம்: சனிக்கிழமை 20-11-71 பி. ப. 2-00 மணி தொடக்கம் 4-00 மணி வரை:

உறவினர் நண்பர்கள் குடும்பசகிதம் வருகை தரும்படி அழைக்கப்படுகின்றனர்.

அழைப்பாளர் திரு சி. சின்னத்துரை
(உரிமையாளர் இரும்புத்தொழிற்சாலை, 48, மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம்)யும் பாரியாரும்

64/8, புகையிரத வீதி,
யாழ்ப்பாணம். 3152

---

**REGAL Jaffna**
Daily 5-15, 7 15 p.m.
Sat-Sundays 10-30 a m,
Roger Brown
Scilla Gabel
in
THE REVENGE OF SPARTACUS
(Cinemas cope - Color)

தினசரி பி. ப 2-00. 10-00
ஜெமினி - தேவிகா
நாகேஷ்
நடித்த
**வாழ்க்கைப் படகு**
(புதிய கொப்பி)

---

**நாகம்ஸ்சினிமா**
சுன்னாகம்
தினசரி பி. ப. 4-30
சனி, ஞாயிறு 10-30
THE MOST BEAUTIFUL WOMAN OF THE WORLD

தினசரி, 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
**கல்யாண மண்டபம்**

---

**வெலிங்ஸினிமா**
(மானிப்பாய்)
தினசரி 6-30, 10-00
சனி, ஞாயிறு 2-30
ஆனந்தன் — ஹேமலதா
**விஜயபுரி வீரன்**
(புதிய கொப்பி)

---

**மனோகரா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ரவிசுராவ் வாணிஸ்ரீ
நடித்த
**துப்பாக்கியே துணை**

---

**சாந்தி சினிமா**
(சுன்னாகம்)
வெள்ளி, சனி பி. ப. 4-15
THE TRYGON FACTOR
(Adults Only)
ஆங்கிலப்படம்

மாலை, 6-15, இரவு 9-30
ஞாயிறு பி. ப. 2-30
ஜெமினி-விஜயகுமாரி
நடித்த
**மனைவி**

---

**ராஜா** (யாழ்ப்பாணம்)
இன்று மட்டும்
சிவாஜி, பத்மினி, பானுமதி.
நடித்த
தினசரி 4 காட்சிகள்
# ராஜபக்தி
[புதியகொப்பி]

---

**ராணி** (யாழ்ப்பாணம்)
எம்.ஜி.ஆர். — ஜெயலலிதா
நடித்த
தினசரி காலை 10-30, இரவு 10-00
# தாய்க்குத் தலைமகன்

தினசரி 2-30, 6-30
சிவாஜி - சரோஜாதேவி
நடித்த
# என்தம்பி

---

5-வது வெற்றிவாரம்
**லிடோ** [யாழ்நகர்]
காலை 10-00 பி. ப. 2-00 மாலை 6-00, இரவு 9-30.
# ஆராதனா
(.......... சித்திரம்)
ராஜேஷ்கன்னா ★ ஷர்மிளா தாகூர்
சுஜித்குமார் ★ ஃபரீடா ஜலால்
நடித்தது.

---

3-வது வாரம்
**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள், சனி, ஞாயிறு 4 காட்சிகள்.



★ ரவிசந்திரன்
★ ஜெயலலிதா
★ நாகேஷ்
★ அசோகன்
★ ஷீலா
நடித்த
# மூன்றெழுத்து
(ஈஸ்ட்மன் கலர்)

---



**ஆரம்ப விழா**
# ஸ்ரீகாலிங்கன் தியேட்டர்
இணுவில்
20—11—71 சனிக்கிழமை
[திறப்புவிழா நேரம் பி. ப. 5-00 மணி]
தினசரி காட்சிகள்: மாலை 6-30 மணி, இரவு 9-30 மணி

★ சிவாஜி ★ பத்மினி ★ சாவித்திரி
★ கே. ஆர். விஜயா ★ தேவிகா
மற்றும்பலர் நடித்த
# சரஸ்வதி சபதம்
புதிய நிருவாகஸ்தரினால்
திருத்தியமைக்கப்பெற்ற நவீன யந்திர சாதனங்களுடன்
சினிமாஸ் லிமிட்டெட் தாபனத்தாரின் படங்கள் காண்பிக்கப்படும்.



---

**யாழ். வின்ஸர் திரையில்**
நாளை முதல்
தினசரி 4 காட்சிகள்

இன்று மட்டும்
**காவியத் தலைவி**

★ ஜெய்சங்கர் ★ நாகேஷ்
★ ரவிச்சந்திரன் ★ காஞ்சனா
நடித்த

அறிஞர் அண்ணாவின்
# காதல்ஜோதி

19 NOV 1971

# நவகாளியின் பெரும்பகுதியில் கொரில்லாக்கள் ஆதிக்கம்?

## எல்லையில் மோதல்கள் இன்னும் ஓயவில்லை

புதுடில்லி, நவ.18

இந்திய- பாகிஸ்தான் எல்லையில் தொடர்ந்து மோதல்கள் நிகழ்ந்து வருவதாக செய்திகள் வந்தவண்ணமிருக்கின்றன.

மேற்கு வங்காளத்தில் 24 பர்கானு ஜில்லாவில் நேற்று மீண்டும் பாகிஸ்தான் துருப்புகள் முகாந்திரமின்றி துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக இந்திய அதிகாரிகள் தெரிவித்தார்கள். கடந்த திங்கட்கிழமை முதற் கொண்டே இங்கு மோதல்கள் நடந்து வருகின்றன. பாகிஸ்தான் பீரங்கிகளை இந்திய எல்லைக்காவல் படையினர் தகுந்த பதிலடி கொடுத்து ஓயவைத்தார்கள் என்றும் அவர்களுக்கு பலத்த சேதம் விளைவிக்கப்பட்டதாகவும் இந்திய அதிகாரிகள் தெரிவித்தனர் பாகிஸ்தான் படையினர் தங்கள் ஆயுதங்கள் கருவிகள் போன்றவற்றையும் கைவிட்டுச் சென்றனதாக தெரிவிக்கப்பட்டது.

கிழக்கு எல்லைப்பகுதியில் பல இடங்களிலும் பாகிஸ்தானியர் காரணம் இன்றி இந்தியப் பிரதேசம் மீது குண்டுவீசுவதாக இந்திய அதிகாரிகள் சொன்னார்கள்.

மேற்கு வங்கத்தில் கடந்த சில தினங்களில் 10 கிராம வாசிகள் கொல்லப்பட்டார்கள் என்றும் கிழக்கு வங்க அகதிகள் பலர் காயமடைந்தனர் என்றும் ஏராளமான மக்கள் தம்வீடுகளை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. கொரிபூர், பான்பூர் ஆகிய பகுதிகளிலும் பாகிஸ்தானியர் முகாந்திரமின்றி நேற்று சுட்டார்களாம்.

ஆகர்த்தலா கிராமத்தில் பாகிஸ்தான் கையாட்கள் நாசவேலைகள் செய்து வருகிறார்களாம். அங்கு ஒன்றில் மூன்று கண்ணி வெடிகள் புதைத்து வைக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

கடந்த திங்களன்று திருஷ்பூரில் ஊடுருவல் செய்த பாகிஸ்தான் படைகள் துரத்தியடிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. திரிப்புராவில் பாகிஸ்தான் குண்டு வீச்சுக் காரணமாக மூன்று அகதிகள் கொல்லப்பட்டனர் மேற்கு எல்லையில் போர் நிறுத்த எல்லையை மீறி வந்து பாகிஸ்தானியர் இந்தியப் பகுதியில் சுட்டார்கள் என்றும் இதுபற்றி ஐ. நா. பார்வையாளரிடம் அறிவிக்கப்பட்டதென்றும் அதிகாரிகள் கூறினார்கள்.

கிழக்குப் பாகிஸ்தானில் நவகாளி மாவட்டத்தின் ஒரு பகுதியை விடுதலைப் படையினர் தம்வசப்படுத்திக்கொண்டு விட்டதாக சொல்லப்படுகின்றது.

குல்தியா பகுதியில் ராணுவ ரயில் ஒன்றை விடுதலைப்படையினர் தகர்த்துவிட்டதாகச் செய்திகள் கூறுகின்றன, பெனோனி, பரசுராம் பகுதிகளில் இரு ரயில் நிலையங்களை விடுதலைப் படையினர் கைப்பற்றி வைத்திருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன. இப்பகுதியில் நடந்தகடும் மோதலில் கடந்த 9-ம் திகதி 400 சிப்பாய்களை விடுதலைப்படையினர் கொன்றுவிட்டார்களாம்.

### பூட்டோ எச்சரிக்கை

இதற்கிடையில் கிழக்குப் பாகிஸ்தானில் 'கையாட்கள்' அரசாங்கம் ஒன்றை நிறுவினால் பலத்த எதிர்ப்பு ஏற்படும் என்று மக்கள் கட்சித்தலைவர் திரு. சுல்பிகார் அலி பூட்டோ ஜெனரல் யாஹ்யாகானை எச்சரித்திருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன.

### ஹீத் கடிதம்

கிழக்குப் பாகிஸ்தான் நெருக்கடிக்கு விரைவில் அரசியல் தீர்வொன்று காணும்படி ஜெனரல் யாஹ்யாகானை பிரிட்டிஷ் பிரதம மந்திரி திரு. ஹீத் மீண்டும் வலியுறுத்தி கடிதம் எழுதியிருக்கிறார்.

### கனடா நன்கொடை

கிழக்குவங்க அகதிகளின் நிவாரணத்துக்கு கெனடா அரசாங்கம் மேற்கொண்டும் ஒரு தொகை பணம் ஒதுக்கியிருக்கின்றது. இத்துடன் இத்தவணையில் கனடா அரசாங்கம் 2 கோடி 50 லட்சம் டாலர் பணத்தை நன்கொடையாக வழங்கியிருக்கின்றது.

பம்பாயிலுள்ள பாகிஸ்தான் தூதரகத்தில் கடமை புரிந்த வங்காளியான உயர்தர அதிகாரி ஒருவர் வங்காளதேசத்துக்கு விசுவாசம் தெரிவித்து பதவியிலிருந்து விலகிக்கொண்டுள்ளார்.

## பாக். விமானத்தை கொரில்லாக்கள் வீழ்த்தினர்

புதுடில்லி, நவ. 18

பாகிஸ்தான் விமானப் படை விமானம் ஒன்றைக் கிழக்கு வங்காளக் கொரில்லாக்கள் சுட்டு வீழ்த்தியதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. கொரில்லாக்கள் நிலத்திலிருந்து சுட்டதாகவும், விமானம் காலபகர் என்னும் இடத்திற்கு அருகில் விழுந்து நொருங்கியதாகவும், அதன் விமானி ஓட்டி பலியாகிவிட்டதாகவும் அச்செய்திகள் தெரிவித்தன.

### டாக்காவில் ஊரடங்கு

கிழக்குப் பாகிஸ்தான் தலைநகரான டாக்காவில் காலவரையறையற்ற ஊரடங்கு உத்தரவை இராணுவ ஆட்சியாளர் பிறப்பித்துள்ளனர். இப்பகுதியிலுள்ள வீடுகளில் ஆயுதங்களைத் தேடும் முயற்சியாக வீடுவீடாகப் பொலிசார் சோதனையிட்டு வருகின்றனராம்.

கொரில்லா நடவடிக்கைகள் கிராமப்புறங்களுக்குப் பரவியுள்ளதாகவும், அங்குதான் இவர்கள் முகாமிட்டிருப்பதாகக் கருதிய இராணுவத்தினர் கிராம மக்களைத் துன்புறுத்திவருவதாக நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகை நிருபர் தெரிவித்துள்ளார். இங்கு பழிவாங்கும் நடவடிக்கையாகப் பல நூற்றுக்கணக்கான சிவிலியன்களை இவர்கள் கொன்று குவித்ததாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## 'பொதுக் கோரிக்கைக்கு ஒன்றுபடவேண்டும்'

யாழ்ப்பாணம், வெள்ளி

தொழிலாளர் எந்தச் சங்கத்திலும் அங்கத்தவர்களாக இருக்கலாம். ஆனால் பொதுக்கோரிக்கையைப் பெறுவதற்கு ஒன்றுசேர்ந்து முன்னணி மூலம் போராட வேண்டும்.

தேசிய அரசாங்க சுகாதார சேவை தொழிலாளர் சங்கக் கூட்டத்தில் காங்கேசன்துறை பிரதிநிதி திரு. என். பத்மநாதன் பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில், சங்கத் தலைவர் திரு. பொ. தேவராசா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பொதுக்காரியதரிசி திரு. கா. ஐயன்னு பேசும்போது சாப்பாட்டு அறை விஷயத்தில், அதிருப்திகரமான முறையில் சிறுசேவையாளரை வைத்திருப்பதை அனுமதிக்கமுடியாது என்று கூறினார். வைத்திய அதிகாரியுடன் தொடர்புகொண்டு, இதற்கான நடவடிக்கை எடுப்பதாகக் கூறினார்.

சேவையாளர் வேலைப்பழுவால் கஷ்டப்படுகிறார்களென்றும், கூடிய சேவையாளர்களை நியமிக்கவேண்டுமென்றும் தலைவர் பேசும்போது கூறினார்.

தெல்லிப்பழை வைத்திய சாலைக்கிளைத் தலைவராக திரு. ஏ. எம். அடுமைநாயகம் தெரிவு செய்யப்பட்டார். செயலாளராக திரு. கே. செல்வராசா தெரிவு செய்யப்பட்டார்.

## ஜெயப்பிரகாஷ் உடல்நிலை

புதுடில்லி, நவ. 18

மூஸாப்பர்பூரில் சுகவீனமுற்றிருக்கும் சர்வோதயத் தலைவர் ஜெயப்பிரகாஷ் நாராயண் உடல்நிலை இப்பொழுது தேறிவருவதாகவும், பயப்படுவதற்கு ஒன்றுமில்லையென்றும் டாக்டர்கள் அறிவித்துள்ளனர்.

## மாதச்சம்பளம் கோருகிறார்கள்

குருநகர், யா

தொழிலாளர் சேவை அடிப்படை நியமனப் பிரகாரம் கடந்த மூன்று வருடங்களாக ஆனையிறவு பொலிஸ் நடைமுகாமில் நாட்சம்பளத்தில் வேலை செய்துவரும் தொழிலாளர்களுக்கு மாதச்சம்பள அடிப்படையில் சம்பளம் கொடுக்கச் சிபார்சு செய்யும்படி அரசாங்க பொதுச் சேவைத் தொழிலாளர் சங்க யாழ். கிளை செயலாளர் எஸ். ஆறுமுகம் வடபகுதி பொலிஸ் அதிபரைக் கேட்டுள்ளார்.

—

சங்கானை, வியாழன்

இலங்கைப் போக்குவரத்துச் சபையில் வேலைவாய்ப்பைப் பெறுவதற்கு விண்ணப்பித்தவர்களுக்கு மேற்படி சபையினர் அனுப்பும் பதில் தனிச் சிங்களமாக இருப்பதனால் வடபகுதி விண்ணப்பதாரர்கள் அதனைப் புரிந்துகொள்ளமுடியாமல் பெரும் அவதியுறுகின்றனர்.

கொலை முயற்சி வழக்கில்

## தோட்டத் துரையும் மகனும் விடுதலை

காலி, வியாழன்

கொலை முயற்சிக் குற்றஞ் சாட்டப்பட்டிருந்த காலியைச் சேர்ந்த தோட்டத் துரையான திரு ஐ. டபிள்யூ. குணரத்னவும் அவரது மகனான லால் குணரத்னவும் காலி அசைஸ் நீதியரசரால் விடுதலை செய்யப்பட்டனர்.

ஹினிதும பொலிஸ்பகுதியில் தலங்கல என்ற இடத்தைச் சேர்ந்த கே பி வில்சன் என்பவரை 1968ம் ஆண்டு மே மாதம் 31ம் திகதி சுழல் துப்பாக்கியால் சுட்டுக்கொலை செய்ய எத்தனித்ததாக முன்னாள் ராய்ட்டர் நிருபரும் தோட்டத் துரையுமான திரு குணரத்னவும் அவரது மகனும் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தனர். ஆங்கிலம் பேசும் ஜூரிகள் முன் இவ்வழக்கு விசாரிக்கப்பட்டது. ஜூரிகளின் ஏகமனதான தீர்ப்பை அடுத்து தீர்ப்பு அளிக்கப்பட்டது.

முதல் எதிரி 2வது உலக யுத்தத்தின்போது போர் வீரராக இருந்தவர். இந்த வழக்கில் அவருக்காக வழக்கறிஞர் எவரும் ஆஜராகவில்லை. தாமே வழக்கை நடத்தி ஜூரிகளுக்கும் உரை நிகழ்த்தினார். மகன் சார்பில் வழக்கறிஞர் எம் வாரன் மெண்டிஸ் ஆஜரானார்.

## 'கோணேசர் சித்திரத்தேர் திருப்பணிக்கு உதவுக'

இணுவில், வியாழன்

திருக்கோணேஸ்வரர் ஆலயத்திற்குச் சித்திரத் தேர் அமைக்கும் வேலைகள் தொடங்கி நடைபெற்று வருகின்றன. சுமார் 40 ஆயிரம் ரூபா செலவில் உருவாக்கப்படும் இச்சித்திரத் தேர் வேலைகளை இதற்கென அமைக்கப்பட்ட சித்திர இரதத் திருப்பணிச் சபை கவனித்துவருகிறது.

குறிப்பிடப்பட்ட நிதியை ஆலய உதவை உபயகாரரிடம் பெற்றுத் தேர் வேலைகளை நிறைவேற்றலாமென்ற நம்பிக்கையில் தேர் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டதாயும் ஆனால் எதிர்பார்க்கப்பட்ட தொகை சேராததால் திருப்பணி வேலைகள் தடைப்படும் சாத்தியம் இருப்பதாயும், பொதுமக்களும் இப்பணிக்கு உதவினாலேயே தேர்த்திருப்பணி செவ்வனே நிறைவு பெறுமென்றும் சபை பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

சித்திரத்தேர்த் திருப்பணிக்குரிய மரங்களைப் பத்திரகாளி அம்மாள் ஆலய கர்த்தர் சிவஸ்ரீ க. கு. சோமாஸ்கந்தக் குருக்கள் அன்பளிப்புச் செய்துள்ளார் யாழ்ப்பாணம் திருநெல்வேலி ஆறுமுகம் ஸ்தபதி, சிவரத்தினம் ஸ்தபதி தலைமையில் திருப்பணி நடைபெற்றுவருகிறது.

எதிர்வரும் தை மாதம் சித்திரத் தேர் வெள்ளோட்டத்தை நடத்தவும் மாசி மாதம் மகா சிவராத்திரி தினத்தன்று புதிய இரதத்தில் கோணேஸ்வரர் நகர் பவனி வரச் செய்யவும் திருப்பணிச்சபை தீர்மானித்துள்ளதாகவும், திருப்பணி நிதி சேகரிப்பதில் ஏமாற்றுப் பேர்வழிகளிடம் பொதுமக்கள் விழிப்புடன் இருக்க வேண்டுமென்றும் திருப்பணிச்சபை அதன் அறிக்கையில் தெரிவித்திருக்கிறது.

## சிவில் தொழிலாளர் பாதிப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

மரவரிசை அரசாங்கம் ஒழித்தமை சிறுபான்மை மக்களுக்கு பொருளாதார ரீதியில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறு வட இலங்கை ஐக்கிய சிவில் தொழிலாளர் சங்கக் காரியதரிசி பிரதமருக்கு விடுத்துள்ள தந்தியில் குறிப்பிட்டுள்ளார். மேலும் இவ்விடயம்பற்றி இச்சங்க நிர்வாகக் கமிட்டியினர் இவ்வார இறுதியில்கூடி ஆராய்வர் எனவும் தெரிகிறது.

## இன்றைய பலன்

கார்த்திகைமாதம் 3-ந்திகதி வெள்ளிக்கிழமை (19-11-71)

மேஷம்: முன்னேற்றம் தடைப்படும் குறுக்குவழித் தலையீடு குழப்பத்தை ஏற்படுத்தலாம். அமைதி நன்று.

ரிஷபம்: சுற்றுடலிலும் வேண்டியவைதான் சாதிக்கக் கூடிய செல்வாக்குப் பெருகும். இன்று பொன்னாள்.

மிதுனம்: எண்ணியதில் தடைகள் தோன்றும். ஏமாற்றம் தாக்கும், நண்பர்களும் காலை வாரிவிடக்கூடும். நிதானம் வேண்டும்.

கடகம்: பெரியவர் ஒருவரின் ஆதரவு கிடைக்கும். தெய்வத்தின் அருளும் உண்டு இலட்சியப் பாதையில் புதிய முன்னேற்றம் காணப்படும்.

சிம்மம்; நம்பிக்கை வைப்பதன்மூலம் பணம் பறிபோகலாம். புதிய தொழில்களை இன்று பின்போடவும்.

கன்னி: கடமையில் ஆர்வம் பிறக்கும். டாக்டர்களுக்கு செல்வாக்குப் பெருகும் நிம்மதியான தினம்.

துலாம்: எதிர்பாராத வகையில் பொருள் விரயமாகும். நண்பர்களை பகைத்துக் கொள்வீர்கள். வீண் சிந்தனைகளுக்கு இடமளியாதிருக்கவும்.

விருச்சிகம்; காத்திருந்த கண்களுக்குக் களியூட்டும் விருந்தொன்று கிடைக்கும். மகிழ்ச்சியான தினம்.

தனுசு: பிறருக்கு உதவுவதில் முன்நிற்பீர்கள் இதன்மூலம் பணம் செலவாகும். அரசியல்வாதிகளுக்கு இன்று அதிர்ஷ்ட தினம்.

மகரம்: மனதில் உற்சாகம் குன்றும். அபாயகரமான காரியங்களில் ஈடுபடாதிருக்கவும். இனத்தவருடன் பகைத்துக்கொள்வீர்கள்.

கும்பம்: தாய்வழி மூலம் பணவரவுக்கும் இடமுண்டு. சிலருக்கு அதிர்ஷ்ட லாபங்களும் கிடைக்கலாம். முன்னேற்றமான தினம்.

மீனம்: புதிய பாதையில் நடைபோடுவீர்கள். குடும்பத்திலும் பிணைப்புகள் ஏற்படும். பொதுவாக நல்ல தினம்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

ஆட்சிமன்றத்திலே

எஸ். எம். கோபாலரத்தினம்

# ஏழைகளைச் சுரண்டிச் சம்பாதிப்பவர்களை சுட்டுக் கொல்ல சட்டம் வேண்டும்

—குண்டசாலை எம். பி.

## டி. எஸ்ஸும் இழுபட்டார்

பட்டாக வெடித்தது போல் சுமார் ஒருமணிநேரத்திற்குமேல் திருமதி விவியன் குணவர்த்தன சபையில் வீராவேசப் பேச்சு நிகழ்த்திக் கொண்டிருந்தார். அவருடைய பேச்சு முழுவதும் யு என் பி அரசாங்கத்தின் மீது கணை தொடுப்பதாகவே இருந்தது. வலது கையில் மூக்குக் கண்ணாடியைப் பிடித்துக் கொண்டு இடது கையில் சில கடதாசிகளையும் வைத்துக் கொண்டு எதிர்க்கட்சித் தலைவரைப் பார்த்தபடியே பொரிந்து தள்ளிக் கொண்டிருந்தார் விவியன். எதிர்க்கட்சித் தலைவர் ஜே ஆர் சிறிதுநேரம் கண்களை மூடிக் கொண்டும் மற்றும் சிறிதுநேரம் வழமையான புன்னகையை உதிர்த்துக் கொண்டும் மௌனமாக இருந்தார். சபைச் சம்பிரதாயப்படி விவியன் சபாநாயகரைப் பார்த்தே பேசவில்லை. எதிர்க்கட்சித் தலைவரைப் பார்த்தபடி பேசிக்கொண்டிருந்தார். இதைப் பொறுக்க முடியாமலோ என்னவோ ஜே ஆர் சிரித்துக்கொண்டே மெதுவாக எழுந்துவெளியே சென்றுவிட்டார். விடாமல் விவியன் எதிர்க்கட்சித் தலைவருக்கு அருகே அமர்ந்திருந்த திரு டட்லியைப் பிடித்துக் கொண்டார். 'இதோ இருக்கிறாரே முன்னாள் பிரதமர். அவரும் அவருடைய தகப்பனாரும் கூட முதலாளித்துவ வாதிகளாக அவர்களுடைய தலைவர்களுக்காகத்தான் வாதாடி வந்திருக்கிறார்கள்' என்று மூச்சுவிடாமல் ஒரு பிடி பிடித்தார்.

யின் பேச்சும் அதன் பின்னர் யு. என். பி. எம். பி. ஹேரத்தின் பேச்சும் சபையைக் கலகலக்கச்செய்து விட்டன.

இந்த வரவு-செலவுத்திட்டத்தில் குறைகளிருக்கத்தான் செய்கின்றன என்று ஆரம்பித்த குண்டசாலை ஏ. எம். ஜினதாசா யு என் பி யின் பழைய கொள்கைகளையும் நடவடிக்கைகளையும் அதன் இன்றைய போக்கையும் சாடினார். அவர் பேசிக் கொண்டிருக்கும் போதே அவருக்கு முன்னாலுள்ள ஆசனத்திலிருந்த உதவி அமைச்சர் திரு. ரத்னே தேசப்பிரிய சேனநாயக்கா அவருக்கு பொயின்ட்ஸ் கொடுத்து உற்சாகமூட்டிக் கொண்டிருந்தார். இடைகளத்தில் நகைச்சுவை ததும்ப ஜினதாசா பேசியதைக்கேட்டு சபை உறுப்பினர்கள் மட்டுமல்ல பார்வையாளர் கலரியிலிருந்தவர்கள் கடமையாற்றிக் கொண்டிருந்த காவற்படையினரும் கூட விழுந்துவிழுந்துசிரித்தனர். இச்சமயம் சபைக்குள் பிரவேசித்த பிரதமரும் அவரது பேச்சை ரசித்து அனுபவித்தார்.

'அரசாங்க இலாகா அதிகாரிகள், அவர்கள் எவ்வளவு உயர்தர அதிகாரிகளாக இருந்தாலும் ஓர் அமைச்சரின் சம்பளத்தைவிட அதிகமாக இருக்கக் கூடாது' என்று கூறிய குண்டசாலைப் பிரதிநிதி அமைச்சருக்கு இப்போது ஆயிரத்தி நூறுதான் சம்பளம் என்றபோது நிதி அமைச்சருட்பட எல்லோரும் சிரித்தனர். 'நிரந்தரக் காரியதரிசிகள் தாங்களா

### விவியன் பார்வையைப் பொறுக்காத ஜே. ஆர்.

இச்சமயம் சபாநாயகர் திருமதி விவியனைப் பார்த்து "என்னைப் பார்த்துப் பேசுங்கள்' என்று சொன்னதும் "பயப்படாதீர்கள் என் கையில் கண்ணாடிக்கூடதான் இருக்கிறது. கைக்குண்டு அல்ல' என்றார். விவியன் பேசும்போது இடைமறித்துப் பதில் சொல்ல திரு டட்லி பல தடவைகள் முனைந்தும் அதற்கு இடம் கொடுக்காமலேயே தமது பேச்சை அவர் முடித்தார். 'நீங்கள் பசுமைப் புரட்சி, வெண்மைப்புரட்சி என்றெல்லாம் பெரிதாகச் சொன்னீர்களே அதெல்லாம் என்னாச்சு. யார் நன்மை பெற்றனர். பெரும் பணமூட்டைகளுக்குத்தான் இலாபம் கிடைத்தது. நாங்கள் தேர்தலைக் கருத்தில் கொள்ளவில்லை. தேர்தலுக்கு இன்னும் அதிககாலம் இருக்கிறது. ஆனால் நாங்கள் உண்மையான நிலச்சீர் திருத்தத்தைக் கொண்டு வருவோம்' என்று விவியன் கூறி முடித்தார்.

திருமதி விவியனின் பேச்சுக்குப்பின் 'பொடிபுத்தா' முதியான்சே தென்னக்கூன் பேசினார்.

வரவு-செலவுத் திட்டத்தின் மீதான விவாதம் காலையில் பொரிவாகவும் பின்னர் பிற்பகலில் விவியனின் பேச்சுடன் விறுவிறுப்பான கட்டத்தையும் அடைந்தமாலையில் குண்டசாலைப்பிரதிநிதி

களே தங்கள் சம்பளத்தைக் குறைக்க முன்வர வேண்டுமென்று கேட்டபோது அமைச்சர்கள் அரசியல் நியமனம் பெற்றவர்கள். அவர்கள் நாளைக்கே போய்விடலாம் நாங்கள் அப்படியா' என்று ஒரு நிரந்தரக் காரியதரிசி கேட்டதாகத் தெரிவித்த திரு ஜினதாசா, அதிகார வர்க்கத்தினரின் சம்பளத்தை வெட்டவேண்டும்; அப்போதுதான் அவர்கள் சோஷலிஸ்டு ஆவார்கள்" என்றார்.

ஏழைகளைச்சுரண்டி இலட்சக்கணக்கில் சம்பாதிப்பவர்களைச் சுட்டுக்கொல்லவும் சட்டம் கொண்டுவர வேண்டுமென்றும் அவர் யோசனை கூறினார். நில உச்சவரம்பு பற்றிக் குறிப்பிடுகையில் 'இருபத்தைந்து ஏக்கர் இருந்தால் அவனும் முதலாளிதான்' என்றார். அரசாங்க இலாகாக்கள்பலவற்றையும் குறைகூறிய அவர் எனக்கு அதிகாரமிருந்தால் விவசாய இலாகாவையே ஒழித்துவிடுவேன் என்றார்

வரவு-செலவுத் திட்டத்தில் மாறுதல் செய்தால் சம்பிரதாயப்படி நிதிமந்திரி ராஜினாமாச் செய்யவேண்டுமென்று ஐக்கிய தேசியக் கட்சியினர் ஒரு பிரசாரத்தைத் தொடக்கியிருக்கிறார்கள். இந்த சம்பிரதாயப் பேச்சுக்குக் காதுகொடுக்காதீர்கள் நீங்கள் பதவி துறக்க வேண்டியதில்லை" என்று

திரு ஜினதாசா நிதி அமைச்சருக்கு ஒரு வேண்டுகோளும் விடுத்தார்.

சுரண்டல் மூலம் லட்சக்கணக்கில் சம்பாதிப்போர்களைச் சுட்டுக்கொல்ல வேண்டுமென்று குண்டசாலைப் பிரதிநிதி யோசனை கூறுவதற்கு முன் இடையில் சிறிது நேரம் இருந்து மற்றவர்களுடன் சேர்ந்து அவரது பேச்சை ரசித்துச் சென்றுவிட்டார். சபையில் எதிர்க்கட்சிப் பக்கத்திலுள்ள பின் ஆசனங்கள் சில இடவசதியீனம் காரணமாக அரசாங்கக் கட்சிப் பிரதிநிதிகள் சிலருக்கு

### 'அதிகாரமிருந்தால் விவசாய இலாகாவையே ஒழித்துவிடுவேன்'

சுதந்திரக்கட்சி உறுப்பினர் திரு ஆர். எம். பண்டாரா மக்களின் உணவைப் பெருமளவில் விழுங்கும் எலி, பெருச்சாளிபோன்றபிராணிகளை ஒழித்துக்கட்ட ஒரு இயக்கம் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று ஆலோசனை கூறினார். செல்வந்தர் வீடுகளில் செல்லப்பிள்ளைகளாக வளரும் நாய்களுக்கு வரி விதிக்க வேண்டுமென்றும் அவர் யோசனை கூறினார்.

ஐக்கியதேசியக் கட்சியைச் சேர்ந்த திரு எஸ். பி. ஹேரத் இன்று கடைசியாகப் பேசியவர். அவர் பேசத் தொடங்கியபோது எதிர்க் கட்சியினர் தரப்பில் ஒருவரும் இருக்கவில்லை. தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த கோப்பாய் பிரதிநிதி திரு சி. கதிரவேலுப்பிள்ளை ஒதுக்கப்பட்டிருப்பது தெரிந்ததே. எதிர்க்கட்சிப் பக்கத்திலுள்ள பின் ஆசனங்களில் ஆளும்கட்சிப் பிரதிநிதிகள் அமர்ந்திருக்கிறார்கள். அவர்களுக்கும் அரசாங்கக் கட்சியினருக்கும் மத்தியில் தனியே எதிர்க் கட்சியைச் சேர்ந்த ஒருவர் பேசத் தொடங்கினால் அவரது நிலைமை எப்படியிருக்கும். அவர் ஒருவார்த்தை பேசி முடிப்பதற்குள் பின்னாலிருந்தும் முன்னாலிருந்தும் பல குரல்கள் இடையீடு செய்து ஒலிக்கும். அவரும் விடவில்லை மாவின் விலையை ஏன் உயர்த்தினீர்கள். சீனியின் விலையை ஏன் அதிகரித்தீர்கள்? பின்னர் இந்த யோசனையைஏன் திரும்பப் பெற்றீர்கள் இப்படிச்செய்த நீங்கள் ராஜினாமாச் செய்திருக்க வேண்டுமே! என்றெல்லாம் குறுக்கீடுகளுக்கிடையேயும் சிரித்துச்சிரித்துப் பேசினார்.

ஆஸ்பத்திரிகளில் மருந்தெடுக்கச் செல்லும் நோயாளர் 25 சத முத்திரை வாங்கிக் கட்டணமாகச் செலுத்த வேண்டுமென்ற யோசனையை திரு ஹேரத் கண்டிக்கத் தொடங்கியதும் முன்னர் யு என் பி ஆட்சியில் சுகாதார அமைச்சராக இருந்த திரு சனி சேனநாயக்கா, வசதி படைத்தவர்களும் ஆஸ்பத்திரிகளில் மருந்துகளை வாங்கி விற்கிறார்களென்றும் மருந்துக்காக நோயாளர்களிடமிருந்து இருபத்தைந்து சதமாவது அறவிட்டால்கூட அதனால் பாதகமேற்படாதென்றும் கூறியதாகத் தெரிவித்து அதை ஆட்சிமன்ற நடவடிக்கைப் பதிவேட்டிலிருந்து நிதிஅமைச்சர் என். எம். வாசித்துக் காட்டினார்.

'இது எப்போதைய ஹன்சாட்?' என்று ஹேரத் கேட்க 'சமீபகாலத்ததுதான்' என்று என் எம் பதிலளிக்க 'ஐயோ, அந்த யோசனையா நீங்கள் எடுக்கிறீர்கள். அதைக் கேட்டவர்கள் கதியைப் பாருங்க

(5-ம்பக்கம் பார்க்க)



